தினமணி

## விலை உயர்வால் தவிக்கும் சத்துணவு மையங்கள்: சத்துணவில் காய்கறிகளைத் தேடும் குழந்தைகள்!

கே.கே.மணிகண்டன்

First Published : 04 Jan 2011 03:55:22 AM IST



கோவை : காய்கறி விலை உயர்வு காரணமாக அரசுப் பள்ளிகளில் சத்துணவில் காய்கறிகள் சேர்ப்பது குறைந்துவிட்டது. சத்துணவில் காய்கறிகளைத் தேடும் பரிதாப நிலை குழந்தைகளுக்கு ஏற்பட்டுள்ளது.

காய்கறி விலை உயர்வு காரணமாக அரசுப் பள்ளிகளில் சத்துணவு சாப்பிடும் குழந்தைகளுக்கு அரசு நிர்ணயித்துள்ள அளவுக்குக் கூட காய்கறிகளை சாப்பாட்டில் தரமுடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

**55 லட்சம் மாணவர்கள்:** தமிழ்நாட்டில் ஆரம்பப் பள்ளிகள் முதல் மேல்நிலைப் பள்ளிகள் வரை 55 லட்சம் மாணவர்கள் சத்துணவு சாப்பிடுகின்றனர். தலா ஒரு குழந்தைக்கு காய்கறிக்கு 32 பைசா, மளிகைப் பொருள்களுக்கு 14 பைசா, விறகுக்கு 24 பைசா வீதம் மொத்தம் 70 பைசா வீதம் சத்துணவுக் கூடங்களுக்கு அரசு வழங்கிறது. கடந்த 2 மாதங்களுக்கு முன்பிருந்துதான் 70 பைசா வீதம் வழங்கப்படுகிறது. அதற்கு முன்னர் 44 பைசா வீதம்தான் வழங்கப்பட்டது.

ஆரம்பப் பள்ளிக் குழந்தைகளுக்கு தலா 100 கிராம் அரிசி, உயர்நிலை, மேல்நிலைப் பள்ளி மாணவர்களுக்கு தலா 150 கிராம் வீதம் அரிசியும் இரு பிரிவுக்கும் தலா 15

கிராம் பருப்பும், 3 கிராம் எண்ணெய் அரசால் வழங்கப்படுகிறது.

வாரத்தில் 5 தினங்களுக்கு முட்டை வழங்கப்படுகிறது. வெள்ளிக்கிழமை தோறும் சத்துணவுக் குழந்தைகளுக்கு தலா 20 கிராம் அளவுக்கு உருளைக் கிழங்கை வேகவைத்து தனியாகத் தர வேண்டும்.

அதிகரித்துவரும் காய்கறி விலை, மளிகைப் பொருள்கள் விலை, விறகு விலைக்கும் சத்துணவுக்கு அரசு தரும் தொகைக்கும் ஏணி வைத்தாலும் எட்டாது என்கின்றனர் சத்துணவு அமைப்பாளர்கள்.

காய்கறி விலை உயர்வு காரணமாக, சத்துணவு நிலைமை குறித்து சத்துணவு ஊழியர்கள் சங்க மாநிலத் தலைவர் கே.பழனிச்சாமி கூறியது:

காய்கறி,மளிகைப் பொருள்கள், விறகு விலை உயர்வு காரணமாக சத்துணவு சமைக்க கூடுதல் செலவாகிறது. சத்துணவு அமைப்பாளர்கள் மாதந்தோறும் தங்கள் சொந்தப் பணத்திலிருந்து ரூ. 400 வரை செலவு செய்து காய்கறிச் செலவையும், விறகுச் செலவையும் சமாளிக்கின்றனர். தாங்களும் அரசு ஊழியர்களாகிவிடுவோம் என்ற நம்பிக்கைதான் இதற்குக் காரணம்.

தலைவர்கள் பிறந்த நாளின்போது சத்துணவு சாப்பிடும் குழந்தைகளுக்கு பொங்கல் வழங்க வேண்டும். இதற்காக தலா ஒரு குழந்தைக்கு 33.5 பைசா அரசு தருகிறது. 50 குழந்தைகள் இருந்தால் ரூ.17 வழங்கப்படுகிறது. இந்தத் தொகை சரியாக இருக்குமா?.

வெளிமார்க்கெட்டில் வெல்லம் கிலோ ரூ. 40க்கும் கூடுதலாக விற்கப்படுகிறது.

தினமும் கீரை சேர்க்க வேண்டும். வாரத்தில் 5 நாள்கள் முட்டை வழங்கப்படுகிறது. ஒரு முட்டை 45 கிராம் இருக்க வேண்டும். ஆனால், சத்துணவுக்குத் தரப்படும் முட்டை 25 கிராம் எடை அளவுக்கு உள்ளது. குழந்தைகளுக்கு தலா ரூ. 2 வீதம் வழங்கினால்தான் தரமான சத்துணவு கிடைக்க வழி பிறக்கும் என்றார்.

அங்கன்வாடி மையம்: அங்கன்வாடி ஊழியர் மற்றும் உதவியாளர் சங்க மாநிலத் தலைவர் எஸ். ஜானகி கூறியது:

தமிழ்நாட்டில் அங்கன்வாடி மையங்கள் 52 ஆயிரம் உள்ளன. 2 முதல் 5 வயது

வரையிலான குழந்தைகள் ஒவ்வோர் மையத்திலும் 10 முதல் 40 வரை உள்ளனர். தலா ஒரு குழந்தைக்கு 80 கிராம் அரிசி, 10 கிராம் பருப்பு, எண்ணெய் 2 கிராம் வீதம் வழங்கப்படுகிறது. இதுதவிர தலா ஒரு குழந்தைக்கு காய்கறிக்கு 25 பைசா, விறகுச்

செலவுக்கு 19 பைசா, மளிகைப் பொருள்களுக்கு 11.5 பைசா என 56 பைசா வீதம் வழங்கப்படுகிறது.

கடந்த 2 மாதங்களுக்கு முன்புவரை 43.5 பைசா வீதம்தான் தரப்பட்டது. 10 குழந்தைகள் உள்ள மையத்துக்கு காய்கறிக்கு ரூ.2.50 பைசா தரப்படும் நிலையில், காய்கறி, கீரை வாங்கி சமைக்க வேண்டும். காய்கறி விலை உயர்வு காரணமாக போதுமான காய்கறிகளை சத்துணவில் சேர்க்க இயலாத நிலை ஏற்பட்டுள்ளது. குழந்தைக்கு தலா ரூ.1 வீதம் வழங்கினால்தான் தரமான உணவு குழந்தைகளுக்குச் சென்றடையும் என்றார்.

ஊட்டத்து மிக்க குழந்தைகள் உருவாக முட்டை மட்டுமே சரிநிகர் உணவாக அமையாது, சத்தான காய்கறிகளும் சத்துணவில் தேவை என்பதை அரசுதான் கவனத்தில் கொள்ள வேண்டும்.

**அங்கன்வாடி ஊழியர்களுக்கு காய்கறி, பழங்களை பதப்படுத்த பயிற்சி**

First Published : 03 Jan 2011 11:24:42 AM IST

காரைக்கால், ஜன. 2: காரைக்காலில் உள்ள வேளாண் அறிவியல் நிலையத்தின் சார்பில் அங்கன்வாடி ஊழியர்களுக்கு காய்கறி, பழங்களை பதப்படுத்தும் பயிற்சி அண்மையில் அளிக்கப்பட்டது.

காரைக்கால் மாவட்டம், மாதூரில் உள்ள வேளாண் அறிவியல் நிலையத்தின் மனையியல் பிரிவு சார்பில் இப் பயிற்சி வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

இதில் மகளிர் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டுத் துறையைச் சேர்ந்த அங்கன்வாடி ஊழியர்கள் கலந்து கொண்டனர். பழங்கள் மற்றும் காய்கறிகளில் உள்ள சத்துகள், இதை அங்கன்வாடி குழந்தைகளுக்கு பதப்படுத்தி தருவது உள்ளிட்ட விளக்கங்களை வேளாண் அறிவியல் நிலைய மனையியல் பிரிவு உதவி தொழில்நுட்ப வல்லுநர் ரா. லதா அளித்தார்.

திராட்சைப் பழ ஸ்குவாஷ், தக்காளி ஊறுகாய், பல்வேறு வகை பழ ஜாம், பழரச பானம், நெல்லி கேன்டி (மிட்டாய்) தயாரித்தல் குறித்த செயல் விளக்கம் அளிக்கப்பட்டது.

**3 கோடியே 25 லட்சத்துக்கு பருத்தி ஏலம்**

First Published : 03 Jan 2011 12:13:40 PM IST

எடப்பாடி, ஜன. 2: கொங்கணாபுரம் கூட்டுறவு விற்பனைச் சங்க மார்க்கெட்டில் 3 நாட்களில் 3 கோடியே 25 லட்சத்துக்கு பருத்தி ஏலம் போனது.

திருச்செங்கோடு வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கத்தின் கிளை கொங்கணாபுரத்தில் இயங்கி வருகிறது.

சேலம், தர்மபுரி, கிருஷ்ணகிரி, நாமக்கல், ஈரோடு மட்டுமல்லாமல் மஹாராஸ்டிரம், ஆந்திரம், கர்நாடகம், ஒரிசா மாநிலங்களில் இருந்து ஏராளமான வியாபாரிகள் இங்கு வந்து பருத்தியை வாங்கிச் செல்கின்றனர். வாரந்தோறும் சனிக்கிழமைகளில் பருத்தி ஏலம் நடைபெறும்.

பருத்தி வரத்து அதிகம் உள்ள நேரங்களில் வெள்ளி, சனி, ஞாயிற்றுக்கிழமைகளில் ஏலம் நடைபெறும். அதன்படி கடந்த வெள்ளி, சனி, ஞாயிறு ஆகிய 3 நாட்களில் நடந்த பருத்தி ஏலத்தில் 17 ஆயிரத்து 500 மூட்டை பருத்தி ஏலத்துக்கு வந்தது. இதில் பிடி ரக பருத்தி 100 கிலோ மூட்டை ரூ. 4,300 முதல் ரூ. 4,650 வரையும், டி.சி.எச். ரக பருத்தி 100 கிலோ மூட்டை ரூ. 4,700 முதல் ரூ. 5,650 வரையும், ஆர்.சி.எச். ரக பருத்தி 100 கிலோ மூட்டை ரூ. 4,650 முதல் ரூ. 5,350 வரையும் ஏலம் போனது.

3 மூன்று நாட்களில் மொத்தம் 3 கோடியே 25 லட்சம் ரூபாய்க்கு பருத்தி ஏலம் நடைபெற்றது. கடந்த ஆண்டைக் காட்டிலும் பருத்திக்கு கூடுதல் விலை கிடைத்ததால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

**பேய்குளம் அருகே விவசாயிகளுக்கு பயிற்சி முகாம்**

First Published : 03 Jan 2011 11:26:22 AM IST

சாத்தான்குளம், ஜன . 2: தமிழ்நாடு அரசு வேளாண்மை பொறியியல் துறை சார்பில் பேய்குளம் அருகே உடையார்குளத்தில் விவசாயிகளுக்கு செயல்விளக்க பயிற்சி முகாம் நடைபெற்றது.

செங்குளம் ஆயக்கட்டு விவசாயிகள் சங்கத் தலைவர் முருகேசன் தலைமை வகித்தார். திருச்செந்தூர் வேளாண் பொறியியல் துறை உதவி செயற்பொறியாளர் சுந்தர், குறிப்பன்குளம் ஊராட்சித் தலைவர் அருணகிரி, உடையார்குளம் பால்பண்ணைத் தோட்டம் மோகன் முன்னிலை வகித்தனர். திருச்செந்தூர் இளநிலை பொறியாளர் மரியபாக்கியம் வரவேற்றார்.

மேலாண்மை திட்டத்தின் கீழ் பன்னம்பாறை, எழுவரைமுக்கி, பழங்குளம், பிடானேரி, புதுக்குளம், சாத்தான்குளம், நெடுங்குளம், கொம்பன்குளம்,கோமானேரி, மீரான்குளம், ஸ்ரீவெங்கடேஸ்வரபுரம், கருங்கடல், கட்டாரிமங்கலம், வெள்ளமடம், குறிப்பன்குளம், உடையார்குளம் பகுதி விவசாயிகள் 30 முதல் 90 சதவிகித மானியத்தில் திட்ட பயன்களை பெறலாம் என்று அறிவுறுத்தப்பட்டது.

ஆட்சிமன்ற குழு உறுப்பினர் ஆறுமுகநயினார், இளநிலை பொறியாளர் லட்சுமிகாந்தன், கிங்ஸ்லி உள்பட பலர் கலந்துகொண்டனர். திருச்செந்தூர் உதவி பொறியாளர் மகேஷ் நன்றி கூறினார்.

**கரும்பு வெட்டு நிறுத்து போராட்டம் ஒத்திவைப்பு**

First Published : 03 Jan 2011 10:25:02 AM IST

சிவகங்கை, ஜன. 2: கரும்பு கொள்முதல் விலையை 1987 ஆக உயர்த்தவில்லை என்றால் ஜனவரி 3-ம் தேதி முதல் கரும்பு வெட்டுவதை நிறுத்தவுள்ளதாக விவசாயிகள் அறிவித்திருந்த போராட்டம் தாற்காலிகமாக ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

சக்தி சர்க்கரை ஆலை நிறுவனத்துக்கு சிவகங்கை மாவட்டம், படமாத்தூர் பகுதியில் ஒரு சர்க்கரை ஆலை உள்ளது. இந்த ஆலைக்கு கரும்பு வழங்கிவரும் விவசாயிகள் இந் நிறுவனத்தின் ஈரோடு மாவட்டம் ஆப்பக்கூடலில் உள்ள ஆலை விவசாயிகளுக்கு வழங்குவதைப் போல கரும்புக்கு டன்னுக்கு 1987 வழங்க வேண்டும் என்று கோரி கடந்த மாதம் 28-ம் தேதி ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

இதற்கு ஆலை நிர்வாகத்திடமிருந்து சாதகமான பதில் வரவில்லை என்றால், ஜனவரி 3-ம் தேதி முதல் கரும்பு வெட்டு நிறுத்தும் போராட்டம் நடத்துவதாக தமிழ்நாடு கரும்பு உற்பத்தியாளர்கள் சங்கம் சார்பில் அறிவிக்கப்பட்டது.

இந் நிலையில் ஞாயிற்றுக்கிழமை வருவாய் கோட்டாட்சியர் பொன்னையா, வட்டாட்சியர் வளர்மதி, எஸ். குணசேகரன் எம்எல்ஏ, ஆலை துணைத் தலைவர்

எல்.ஆறுமுகம், கரும்பு விவசாயிகள் சங்க மாநிலத் தலைவர் எஸ். ராமநாதன், போலீஸ் உதவி கண்காணிப்பாளர் கண்ணன் ஆகியோர் பங்கேற்ற அமைதிப் பேச்சுவார்த்தை நடைபெற்றது.

நிறுவனத்தின் நிர்வாக இயக்குநர் வெளியூர் சென்றுள்ளார். அவர் வந்ததும் 13-ம் தேதி விவசாயிகளின் கூட்டத்தை மீண்டும் கூட்டி முடிவு செய்யலாம் எனத் தெரிவிக்கப்பட்டது. இதனையடுத்து, விவசாயிகள் மேற்கொள்ளவிருந்த கரும்பு வெட்டு நிறுத்தும் போராட்டம் தாற்காலிகமாக ஒத்திவைக்கப்பட்டது.

**நெல் சாகுபடி: மகளிருக்கு விளக்க முகாம்**

First Published : 03 Jan 2011 10:22:53 AM IST

கமுதி, ஜன. 2: கமுதி அருகே வயல்வெளி பள்ளி மூலம் உழவர் மகளிருக்கு நெல் சாகுபடி விளக்க முகாம் வெள்ளிக்கிழமை நடத்தப்பட்டது.

கமுதி வட்டாரத்தில் 2010-2011-ம் ஆண்டிற்குரிய தேசிய உணவு பாதுகாப்பு இயக் கம் சார்பில், கமுதி அருகே அச்சங்குளத்தில் ராமநாதபுரம் மாவட்ட வேளாண்மைத் துறை இணை இயக்குனர் சத்தியமூர்த்தி ஆலோசனையின் பேரில் இந்த முகாம் நடைபெற்றது.

கமுதி வட்டார வேளாண்மைத் துறை உதவி இயக்குநர் பா.வன்னியராஜன் தலைமையும், வட்டார அலுவலர் கெப்தமன், துணை அலுவலர் சேதுராம் ஆகியோர் முன்னிலையும் வகித்தனர். உதவி அலுவலர் முத்துபிரியா வரவேற்றார்.

நெல் சாகுபடியில் தரமான விதைகளைப் பெற விதை நேர்த்தி செய்தல், நெல் நாற்று நடவு பயிரை ஆரம்பம் முதல் மகசூல் பெறும் வரை 20 வாரங்களுக்கு வயல்களில் தொடர்ந்து கண்காணித்தல், நெல் பயிர்களில் நன்மை செய்யும் பூச்சிகள், தீமை செய்யும் பூச்சிகள் அமர்ந்திருப்பதை அறிந்து அதற்கேற்ப ஒவ்வொரு வாரமும் பயிர் பாதுகாப்பு முறையை கையாளுதல் உள்ளிட்ட பல்வேறு செயல்பாடுகள் குறித்து முகாமில் விளக்கப்பட்டது. உதவியாளர் கதிரேசன் நன்றி கூறினார்.

தினமலர்

**விதை விலை, விவசாயக் கூலியால் மாற்றுப்பயிருக்கு மாறிய விவசாயிகள்**

பதிவு செய்த நாள் : ஜனவரி 04,2011,02:24 IST

கடலூர் : விதை விலை, கூலியாட்கள் பற்றாக்குறையால் விவசாயிகள் மரவள்ளி பயிருக்கு மாறியுள்ளனர். இதனால் கடலை எண்ணெய் உற்பத்தி பாதிக்கும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

சமையலுக்கு பயன்படுத்தும் பல வகை எண்ணெய்களில் கடலை எண்ணெய் முக்கியத்துவம் வாய்ந்தது. மனித உடலின் தோலில் நிறத்தை கொடுப்பதில் எண்ணெயில் உள்ள கொழுப்புச்சத்து முக்கிய பங்கு வகிக்கிறது. கடலூர் மாவட்டத்தில் 87 ஆயிரம் ஏக்கர் பரப்பளவில் வேர்க்கடலையும், எள் 13 ஆயிரம் ஏக்கரும், சூரியகாந்தி 600 ஏக்கரும் பயிர் செய்யப்படுகின்றன. இதில் வேர்க்கடலைதான் அதிகம் பயிர் செய்யப்படுகிறது. மற்ற பயிர்களைப்போல் அல்லாமல் வேர்க்கடலை பயிர் செய்ய அதிகமான விலையில் விதை வாங்க வேண்டியுள்ளது.

ஒரு ஏக்கர் வேர்க்கடலை பயிர் செய்ய 25 கிலோ விதை பயிறு தேவைப்படுகிறது. தற்போது ஒரு கிலோ வேர்க்கடலை 70 முதல் 90 ரூபாய் வரை விற்பனை செய்யப்படுகிறது. ஒரு ஏக்கர் பயிர் செய்ய விதைக்கு மட்டுமே 5,550 ரூபாய் வரை செலவாகிறது. மேலும் அறுவடைக்கு விவசாய கூலிகள் யாரும் வருவதில்லை. காரணம் வேர்க்கடலை பயிர் அறுவடைக்கு அதிக கூலி கொடுப்பதில்லை. இவ்விரு காரணங்களால் விவசாயிகள் வேர்க்கடலை பயிர் செய்வதை விட எளிதான மரவள்ளிப் பயிருக்கு மாறியுள்ளனர்.

மரவள்ளிக்காக பெரிய அளவில் செலவு செய்து விதை கரணை வாங்க வேண்டியதில்லை. அத்துடன் ஓர் ஆண்டு பயிர் என்பதால் விவசாயக் கூலியை நம்பி விவசாயம் செய்ய வேண்டியதில்லை. இதனால் கடலூர் மாவட்டத்தில் கடலூர், விருத்தாசலம், பண்ருட்டி பகுதிகளில் வேர்க்கடலைக்கு பதிலாக மரவள்ளிக்கு மாறியுள்ளனர். இதனால் கடலை எண்ணெய் உற்பத்தி வெகுவாக குறையும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

**சத்தி பூ மார்க்கெட்டில் பூக்கள் விலை மந்தம்**

பதிவு செய்த நாள் : ஜனவரி 04,2011,02:42 IST

சத்தியமங்கலம்: சத்தி பூ மார்க்கெட்டில் பூக்கள் விலை மந்தமாகியுள்ளது. சத்தியமங்கலம் வட்டாம் விவசாயத்தை அடிப்படையாக கொண்டது. பூஞ்செடிகள் வளர்ப்பில் விவசாயிகள் அதிகளவில் ஈடுபட்டுள்ளனர்.
கார்த்திகையில் பெய்த கன மழை, மார்கழியில் பெய்யும் பனி காரணமாக பூக்கள் அரும்பாக இருக்கும்போதே கருகின. பூ உற்பத்தி குறைந்து, சத்தி பூ மார்க்கெட்டில் விலை உயர்ந்தது. குறிப்பாக மல்லிகைப்பூ விலை 15 நாட்களுக்கு முன் கிலோ 450 ரூபாய் வரை உயர்ந்தது. நேற்று அனைத்து ரக பூக்கள் விலை சரிந்தது. சந்தைக்கு பூக்கள் வரத்து அதிகரித்ததே இதற்கு காரணம். மல்லிகைப்பூ 380 ரூபாய், முல்லை 200 ரூபாய், சம்பங்கி 100 ரூபாய், கோழிக் கொண்டை 100 ரூபாய், செண்டுமல்லி 30 ரூபாய்க்கு விற்றது.

**தக்காளி, தேங்காய் விலை சரிவு**

பதிவு செய்த நாள் : ஜனவரி 04,2011,00:59 IST

காரைக்குடி:காரைக்குடி கணேசபுரம் வாரச்சந்தையில் தக்காளி, தேங்காய் விலை சரிந்துள்ளது.காய்கறிகள் விலை (கிலோ): கடந்த வாரம் 40க்கு விற்ற தக்காளி 25; உருளை 40; கத்தரி 40; பீட்ரூட் 40; கேரட் 40; முள்ளங்கி 40; பெரிய பாகற்காய் 20; சின்ன பாகற்காய் 48; சின்ன வெங்காயம் 40; பெரிய வெங்காயம் 30; வெண்டிக்காய் 40; கருணை 25; 8 ரூபாய்க்கு விற்ற தேங்காய் 5; பட்டர் பீன்ஸ் 60; பீன்ஸ் 40; சீனி அவரை 40; சோயா பீன்ஸ் 35; சவ்சவ் (1) 5; பீர்க்கம் 40; பூண்டு 120; அவரை 46; புடலை 30; காலிபிளவர் (1) 10; நூக்கல் 35; நிலக்கடலை (1 படி) 20; வாழை பூ (1) 15; பச்சை மிளகாய் 40; மல்லித்தழை (1 கட்டு) 5.பழங்கள்: ஆப்பிள் 50; சப்போட்டா 30; திராட்சை 20; மாதுளை 60; சீதாப்பழம் 50; எலுமிச்சை (1) 4, பப்பாளி (1) 10; அண்ணாசி (1) 20;

**விவசாயிக்கு அரசு மானியத்தில்நவீன அறுவடை இயந்திரம்**

பதிவு செய்த நாள் : ஜனவரி 04,2011,02:08 IST

தூத்துக்குடி:4 லட்ச ரூபாய் மானியத்தில் விவசாயிக்கு அறுவடை இயந்திரம் வழங்கப்பட்டது. இதனை கலெக்டர் மகேஷ்வரன் நேற்று வழங்கினார்.தமிழக அரசு விவசாயிகளுக்கு மானிய விலையில் வேளாண் கருவிகளை விவசாயிகளுக்கு வழங்கி வருகிறது. வேளாண் பொறியியல் துறை மூலமாக இவை வழங்கப்படுகிறது. வேளாண்மை இயந்திரமாக்குதல் ஊக்குவித்தல், நவீன கருவிகளை விவசாயிகளிடத்தில் பிரபலப்படுத்துதல் வேளாண் தொழிலாளர் பற்றாக்குறையினை ஈடு செய்தல், மற்றும் வேளாண்மையில் இயந்திர சக்தியை அதிகரித்தல் போன்றவற்றிற்காக இவை வழங்கப்படுகிறது.2010-2011ம் ஆண்டு தூத்துக்குடி மாவட்டத்தில் 62 கருவிகள் 45 லட்சத்து 75 ஆயிரம் மானிய உதவியுடன் வழங்கிட தமிழக அரசு இலக்கு நிர்ணயித்துள்ளது.

களை எடுக்கும் இயந்திரம், பவர் டில்லர், டிராக்டர் கலப்பைகள் மற்றும் இதர கருவிகள் வழங்கிட ஒப்புதல் பெறப்பட்டுள்ளது. இதுவரை இந்த திட்டத்தின் கீழ் விவசாயிகளுக்கு 32 லட்சத்து 75 ஆயிரத்தில் 72 கருவிகள் வழங்கப்பட்டுள்ளது. தற்போது ஓட்டப்பிடாரம் யூனியன் கீழக்கோட்டையை சேர்ந்த சுடலைக்கு 13 லட்சத்து 76 ஆயிரம் மதிப்பிலான அறுவடை இயந்திரம் 4 லட்ச ரூபாய் மானியத்தில் வழங்கப்பட்டுள்ளது. இதற்கான சாவியை நேற்று கலெக்டர் மகேஷ்வரன் சுடலையிடம் வழங்கினார்.அறுவடை இயந்திரத்தின் மொத்த மதிப்பு 13 லட்சத்து 76 ஆயிரம். இதில் அரசு மானியம் 4 லட்சம். பயனாளியின் பங்கு தொகை 9 லட்சத்து 76 ஆயிரம் ரூபாயாகும். அறுவடை இயந்திரம் பெற்றவர் தனது உபயோகம் தவிர சுற்றுப் பகுதியில் உள்ள விவசாயிகளுக்கும் வாடகைக்கு வழங்கும் வகையில் அரசால் இந்த திட்டம் செயல்படுத்தப்படுவதாக வேளாண்மை பொறியியல் துறை வட்டாரங்கள் தெரிவித்தன.

**விவசாயிகளுக்கு நிவாரண உதவி வழங்கல்**

பதிவு செய்த நாள் : ஜனவரி 04,2011,02:25 IST

தூத்துக்குடி:வடகிழக்கு பருவமழையால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு பயிர் இழப்பீட்டு தொகையினை சப்-கலெக்டர் சஜ்ஜன்சிங் சவான் வழங்கினார்.கடந்த சில நாட்களுக்கு முன்பு வடகிழக்கு பருவ மழை கொட்டித் தீர்த்தது. இந்த மழை காரணமாக தூத்துக்குடி மாவட்டத்தில் அதிக அளவில் சேதம் ஏற்பட்டது. குறிப்பாக விவசாய பயிர்களுக்கு அதிக பாதிப்பு ஏற்பட்டது. தூத்துக்குடி மாவட்டத்தில் மழையினால் பாதிக்கப்பட்ட விவசாய பயிர்களுக்கு இழப்பீட்டு தொகை வழங்க மொத்தம் 33 கோடி ரூபாய் தேவை என்று மதிப்பிடப்பட்டுள்ளது.

இதில் முதல் தவணையாக தமிழக அரசு 12 கோடி ரூபாயினை வழங்கியுள்ளது. அந்தந்த பகுதிகளில் உள்ள தொடக்க வேளாண்மை கூட்டுறவு பாங்குகள் மூலம் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு இழப்பீட்டு தொகை வழங்கப்பட்டு வருகிறது. தூத்துக்குடி தாலுகா சங்கரப்பேரி கிராமத்தில் மழையினால் விவசாய பயிர் சேதத்திற்கு 57 ஆயிரம் ரூபாய் இழப்பீட்டு தொகையாக ஒதுக்கப்பட்டுள்ளது. இந்த தொகையினை மீளவிட்டான் தொடக்க வேளாண்மை கூட்டுறவு பாங்கில் வைத்து சஜ்ஜன்சிங் சவான் 9 விவசாயிகளுக்கு வழங்கினார். அப்போது தூத்துக்குடி தாசில்தார் கந்தசாமி, மீளவிட்டான் தொடக்க கூட்டுறவு பாங்க் செயலாளர் சுதாகர் ஆகியோர் உடன் இருந்தனர்.

**ஆடுகளுக்கு தொற்று நோய்**

பதிவு செய்த நாள் : ஜனவரி 04,2011,00:57 IST

சிவகங்கை: ஆடுகளுக்கு தொற்று நோய் பரவுவதை தவிர்க்க, தடுப்பூசி போட அறிவுறுத்தப்பட்டுள்ளது.கலெக்டர் சம்பத் கூறியது: தொடர் மழையால் ஆடுகளின் கால் குழம்பில் புண் ஏற்படுகிறது. வயிற்றில் கொக்கி, ஆம்பிஸ்டோம்ஸ் புழுக்கள் வளரும். ரத்த சோகை, ஈரல், நுரையீரல் வீக்கம் ஏற்பட்டு இறக்க வாய்ப்புள்ளது. கால்நடை

மருத்துவர்களை அணுகி, ஆடுகளுக்கு குடற்புழு நீக்கம் செய்யலாம். கடைகளில் மருந்து வாங்கி கொடுக்க கூடாது. மூன்று மாதங்களுக்கு ஒரு முறை, அரசு மருந்தகங்களை அணுகி குடற்புழு நீக்கம், ஆட்டுக்கொல்லி, துள்ளுமாரி நோய் தடுப்பூசி போட்டுக்கொள்ளலாம், என்றார்.

**புதிய மஞ்சள் வரத்தால் விலை குறைய வாய்ப்பு**

பதிவு செய்த நாள் : ஜனவரி 04,2011,02:45 IST

ஈரோடு: ஈரோடு மஞ்சள் மார்க்கெட்டுக்கு புது மஞ்சள் வரத்தால், இம்மாத இறுதியில் விலை குறையும் வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. ஈரோட்டில் ஒழுங்கு முறை விற்பனை கூடம், கோபி சொசைட்டி, ஈரோடு சொசைட்டி, வெளிமார்க்கெட் ஆகிய நான்கு மஞ்சள் மார்க்கெட் மற்றும் 150 க்கும் மேற்பட்ட தனியார் கமிஷன் மண்டிகள் செயல்படுகிறது. மஞ்சள் மார்க்கெட்டுக்கு ஈரோடு மாவட்டம் மட்டுமின்றி சேலம், தர்மபுரி, கிருஷ்ணகிரி, திருவண்ணாமலை மற்றும் கர்நாடகா மாநிலத்தில் இருந்து மஞ்சள் வரத்தாகிறது. மஞ்சள் மார்க்கெட்டில் சென்ற இரு ஆண்டுகளாக மஞ்சள் விலை வரலாறு காணாத வகையில் விற்பனையாகிறது.
2009 ம் ஆண்டில் ஒரு குவிண்டால் மஞ்சள் 16 ஆயிரத்து 500 ரூபாய்க்கு விற்பனையானது. சென்ற ஆண்டு ஜனவரி புது மஞ்சள் சீஸன் துவங்கியதால் குவிண்டாலுக்கு 6,000 ரூபாய் வரை வீழ்ச்சி அடைந்து 10 ஆயிரம் ரூபாய்க்கு விற்பனையானது. மஞ்சள் தேவை படிப்படியாக அதிகரித்ததால் சென்ற ஆண்டு இறுதியில் ஒரு குவிண்டால் 17 ஆயிரத்து 300 ரூபாய் வரை விற்பனையானது. தற்போது ஒரு குவிண்டால் 16 ஆயிரத்து 800 முதல் 16 ஆயிரத்து 900 ரூபாய் வரை விற்பனையாகிறது. ஈரோடு மார்க்கெட்டுக்கு அந்தியூர் உள்ளிட்ட பகுதியில் இருந்து புது மஞ்சள் வரத்து துவங்கி உள்ளது.

இம்மாத இறுதியில் மஞ்சள் சீஸன் துவங்கி விடும். மஞ்சள் சீஸன் நேரத்தில் மஞ்சள் விலை படிப்படியாக குறைய வாய்ப்பு உள்ளது. புது மஞ்சள் வரத்து காரணமாக மஞ்சள் விலை சிறிதளவு குறைந்துள்ளது. சென்ற வாரம் குவிண்டால் 17 ஆயிரத்து 300 ரூபாய்க்கு விற்பனையானது. நேற்று 400 ரூபாய் வரை குறைந்து 16 ஆயிரத்து 800 ரூபாய்க்கு விற்பனையாகிறது. நேற்றைய நிலவரப்படி விரலி மஞ்சள் ஒரு குவிண்டால் 16 ஆயிரத்து

810 ரூபாய்க்கும், கிழங்கு மஞ்சள் ஒரு குவிண்டால் 16 ஆயிரத்து 850 ரூபாய்க்கும் விற்பனையானது. மஞ்சள் வியாபாரிகள் கூறியதாவது: மஞ்சள் மார்க்கெட்டுக்கு 100 முதல் 150 மூட்டைகள் மட்டும் புது மஞ்சள் வரத்தாகிறது. பழைய மஞ்சளுக்கு கிராக்கி உள்ளது. இம்மாத இறுதியில் புது மஞ்சள் சீஸன் துவங்கி விடும் என்பதால் விலை குறைய வாய்ப்பு உள்ளது. மஞ்சள் தேவை தொடர்ந்து அதிகரித்து கொண்டே செல்வதாலும், ஆன் லைன் வர்த்தகம் காரணமாகவும் பழைய மஞ்சளின் விலை தொடர்ந்து நீடிக்கும் என எதிர்பார்க்கிறோம். இவ்வாறு அவர்கள் கூறினர்.

**தேயிலை செடிகளில் கொப்புள நோய் தாக்குதல்**

பதிவு செய்த நாள் : ஜனவரி 04,2011,01:22 IST

கூடலூர் : கூடலூர் பகுதியில் தேயிலை செடிகளில் கொப்புள நோய் தாக்குதலால் விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர். நீலகிரி மாவட்டத்தில் உள்ள கூடலூர், பந்தலூர் பகுதிகளில் தற்போது நள்ளிரவு முதல் காலை 8.30 மணி வரை கடும் மேக மூட்டத்துடன் கூடிய பனி பொழிவு காணப்படுகிறது. இதனால், தேயிலை செடிகளை கொப்பள நோய் தாக்கி வருகிறது.

தேயிலைக்கு தற்போது ஓரளவு நல்ல விலை கிடைத்து வருகிறது. தரமான தேயிலை உற்பத்தி செய்வதன் மூலம் இதனை தக்க வைத்து கொள்ள முடியும் என தேயிலை வாரிய அதிகாரிகள் அறிவுறுத்தி வருகின்றனர். கூடலூர் பகுதி விவசாயிகள் தரமான தேயிலை இலை உற்பத்தியில் ஆர்வம் காட்டி வருகின்றனர். இந்நிலையில், தேயிலை இலைகளை கொப்பள நோய் தாக்கி உற்பத்தி குறைந்து வருவாய் இழப்பு ஏற்படுத்துவது விவசாயிகளை கவலையில் ஆழ்த்தியுள்ளது. இதே காலநிலை தொடர்ந்தால், தேயிலை உற்பத்தி மேலும் பாதிக்கப்படும் என விவசாயிகள் கவலை தெரிவித்தனர்.தோட்ட கலை துறை அதிகாரிகள் ஆலோசனை பெற்று மருந்து தெளிப்பதன் மூலம் இந்நோயை கட்டுப்படுத்த முடியும் என தேயிலை ஆய்வாளர்கள் தெரிவித்தனர்.

**விதை கிராமம் திட்டத்தில் விவசாயிகளுக்கு பயிற்சி: அடையாள அட்டை வழங்கல்**

பதிவு செய்த நாள் : ஜனவரி 04,2011,01:08 IST

துறையூர்: துறையூர் ஒன்றியம், சிக்கத்தம்பூரில் வேளாண்துறை சார்பில் விதை கிராம திட்டத்தின் கீழ் விவசாயிகளுக்கு பயிற்சி, அடையாள அட்டை வழங்குதல், மானிய விலையில் இடுபொருள் விநியோகம் துவக்கம் ஆகிய முப்பெரும் விழா நடந்தது. பஞ்சாயத்து தலைவர் வரதராஜன் தலைமை வகித்தார். துறையூர் வேளாண் துறை உதவி இயக்குனர் ராஜசேகரன் வரவேற்றார். விவசாயிகளுக்கு அடையாள அட்டை, இடு பொருள் வழங்கி திருச்சி வேளாண்துறை (மத்திய திட்டம்) இயக்குனர் சந்திரசேகரன் பேசுகையில்,""தமிழக அரசு வேளாண் துறை சார்பில் கிராமங்களில் இடுபொருள் முகாம் தினமும் நடத்தி விவசாயிகளுக்கு அடையாள அட்டைகள், மானிய விலையில் இடுபொருட்கள் வழங்கப்படுகிறது. அரசின் மானிய திட்டங்களை விவசாயிகள் நன்கு பயன்படுத்தி கொள்ள வேண்டும்,"என்றார்.

திருச்சி விதைச்சான்று அலுவலர் மணிவண்ணன், தரமான விதை உற்பத்தி செய்ய கடைபிடிக்க வேண்டிய தொழில்நுட்பம் குறித்தும், விதை ஆய்வாளர் மனோன்மணி, விவசாயிகள் விதை வாங்கும்போது கவனிக்க வேண்டியவை குறித்தும் பேசினர். விவசாயிகளுக்கு மானிய விலையில் சிங்சல்பேட், ஜிப்சம், மினி கிட் இடுபொருட்கள் வழங்கப்பட்டது. சிக்கத்தம்பூர், ஒட்டம்பட்டி புதூர், பெருமாள்பாளையம், சிறுநத்தம் கிராமங்களை சேர்ந்த 100க்கும் மேற்பட்ட விவசாயிகள் பங்கேற்று பயனடைந்தனர். வேளாண்மை அலுவலர் செல்வம் நன்றி கூறினார்.

**மக்காச்சோள கொள்முதல் விலை ரூ.1,000 வழங்க விவசாயிகள் சங்கம் கோரிக்கை**

பதிவு செய்த நாள் : ஜனவரி 04,2011,01:11 IST

பெரம்பலூர்: "பெரம்பலூர் மாவட்டத்தில் சாகுபடியாகும் மக்கசோளம் குவிண்டாலுக்கு 1,000 ரூபாய் கொள்முதல் விலை அறிவிக்க வேண்டும்,' என தமிழக விவசாயிகள் சங்கம் சார்பில், பெரம்பலூர் கலெக்டர் விஜயகுமாரிடம் கோரிக்கை மனுகொடுத்தனர்.

அம்மனுவில் கூறியிருப்பதாவது: பெரம்பலூர் மாவட்டத்தில் சாகுபடி செய்யப்பட்ட மக்காசோளம் தற்போது குவிண்டால் 850 ரூபாய்க்கு வியாபாரிகளால் விவசாயிகளிடம் கொள்முதல் செய்யப்பட்டு வருகிறது. பல ஆண்டுகளாக அறுவடை நேரத்தில் விலை குறைந்தும், அறுவடை முடிந்து மூன்று மாதங்களுக்கு பின்னர் விலை உயர்த்தியும் கோழி பண்ணை உரிமையாளர்கள் சங்கம் நிர்ணயிக்கும் விலையை விவசாயிகளிடம் கொள்முதல் செய்யப்படுகிறது. வியாபாரிகள் எடைக்கல்லில், சாக்கில் போன்றவற்றில் மோசடி செய்கின்றனர். எனவே குவிண்டாலுக்கு 1,000 ரூபாய் என விலை அறிவிக்க வேண்டும். வியாபாரிகளின் மோசடி தடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

**மலிவு விலை காய்கறியை வாங்க ஆர்வம் காட்டிய வால்பாறை மக்கள்**

பதிவு செய்த நாள் : ஜனவரி 03,2011,21:25 IST

வால்பாறை : வால்பாறையில் காய்கறி விலை உயர்வால், மலிவு விலை காய்கறி விற்பனை சூடுபிடித்துள்ளது.
வால்பாறை மக்களுக்கு தேவையான அத்தியாவசியப்பொருட்கள் பொள்ளாச்சி, கோவை,மேட்டுப்பாளையம், சாலக்குடி போன்ற ஊர்களிலிருந்து கொண்டு வரப்படுகின்றன. சமீபத்தில் பெய்த கன மழையின் காரணமாக காய்கறி விலை கிடு,கிடுவென உயர்ந்துள்ளது. இதனால் வால்பாறை போன்ற மலைப்பகுதியில் வசிக்கும் தொழிலாளர்கள் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளனர்.

வால்பாறைக்கு தேவையான காய்கறிகள் பொள்ளாச்சி,உடுமலை, கோவை ஆகிய பகுதிகளிலிருந்து கொண்டுவரப்படுகிறது. ஒரு கிலோ தக்காளி ரூ.45 க்கும், கத்தரிக்காய் ரூ.40க்கும், கேரட் ரூ.50 க்கும், பெரியவெங்காயம் ரூ.65 க்கும், சின்னவெங்காயம் ரூ.40 க்கும் விற்பனை செய்யப்படுகிறது. வால்பாறையில் சந்தைநாளான ஞாயிற்றுக் கிழமை அன்று காய்கறி விலை அதிகமாக இருந்ததால் பெரும்பாலான தொழிலாளர்கள் ஏமாற்றத்துடன் திரும்பினர்.

வால்பாறை டவுன் பகுதியில் சந்தை நாளான ஞாயிற்றுக்கிழமை மட்டும் ரூ.30 க்கும் மலிவு விலை காய்கறி விற்பனை செய்யப்படுகிறது. காய்கறி விலை ஏற்றத்தால் அவதிப்பட்ட தொழிலாளர்கள் மலிவு விலையில் காய்கறிகளை வாங்க அதிக ஆர்வம் காட்டினர். ஆனால் மலிவு விலை காய்கறி விற்பனையில் தக்காளி மட்டும் வழங்கப்படுவதில்லை.

**தேயிலை செடிகளில் மர்ம நோய் தாக்குதலால் அதிர்ச்சி : வால்பாறையில் உற்பத்தி வெகுவாக பாதிப்பு**

பதிவு செய்த நாள் : ஜனவரி 03,2011,21:09 IST

வால்பாறை : வால்பாறை தேயிலை செடியை தாக்கும் மர்மநோயால் ஆயிரக்கணக்கான தேயிலை செடிகள் சேதமடைந்துள்ள நிலையில், தேயிலை உற்பத்தியும் வெகுவாக பாதிக்கப்பட்டுள்ளது.

வால்பாறையில் தேயிலை முக்கிய தொழிலாக உள்ளது. இங்குள்ள 50க்கும் மேற்பட்ட எஸ்டேட்டுகளில் சிறிய, பெரிய தேயிலை, காபி, ஏலம், மிளகு போன்ற பயிர்கள் பயிரிடப்பட்டுள்ளன. ஆனால் எஸ்டேட்டுகளில் 80 சதவீதம் தேயிலை பயிரிடப்பட்டுள்ளன. தேயிலை தொழிலை நம்பி 50 ஆயிரத்திற்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் பணிபுரிந்து வருகின்றனர். வால்பாறையில் மட்டும் 12 ஆயிரத்து 628 ஹெக்டேர் பரப்பளவில் தேயிலை பயிரிடப்பட்டுள்ளது. இங்கு உற்பத்தியாகும் தேயிலை தூள் கோவை, குன்னூர், கொச்சி போன்ற ஏலமையத்திற்கு கொண்டு செல்லப்படுகின்றன. இது தவிர வெளிநாடுகளுக்கு உயர்ரக தேயிலை தூள் ஏற்றுமதி செய்யப்படுகிறது.

தற்போது வால்பாறையில் தயாரிக்கப்படும் தரமான தேயிலைத்தூள் மார்க்கெட்டில் ஒரு கிலோ ரூ.180 வரை விற்பனை செய்யப்படுகிறது. இது தவிர ஒரு சில எஸ்டேட்டுகளில் மட்டுமே தயாரிக்கப்படும் "ஆர்கானிக்' என்ற உயர்ரக தேயிலை தூள் கிலோ ஒன்றுக்கு ரூ.900 வரை விற்கப்படுகிறது.கடந்த ஆண்டு நவம்பர் மாதம் வரை தொடர்ந்து இடையிடையே பருவ மழை பெய்ததால் எஸ்டேட்டுகளில் தேயிலை உற்பத்தி வெகுவாக

பாதிக்கப்பட்டுள்ளது. பெரும்பாலான எஸ்டேட்டுகளில் ஏற்கனவே கொப்பள நோய் தாக்குதலால் தேயிலை உற்பத்தி பாதிக்கப்பட்ட நிலையில் தற்போது புது வகையான "கொசு நோய்' தாக்கியுள்ளது.

இதனால் தேயிலை உற்பத்தி பாதிக்கப்பட்டதுடன், தேயிலை விவசாயிகளுக்கு இழப்பு ஏற்பட்டுள்ளது. குறிப்பாக சின்கோனா(டேன்டீ) தேயிலை தோட்டத்தில் இந்நோய் தாக்குதலால் ஆயிரக்கணக்கான தேயிலைச்செடிகள் பாதிக்கப்பட்டுள்ளன.
தேயிலை விவசாயிகளுக்கு சோதனை:இது குறித்து தோட்ட அதிகாரிகள் கூறியதாவது: வால்பாறையில் எந்த ஆண்டும் இல்லாத அளவுக்கு இந்த ஆண்டு தேயிலை செடிக்கு கொசு நோய் தாக்குதலால் ஆயிரக்கணக்கான தேயிலை செடிகள் கருகி உற்பத்தி பாதிக்கப்பட்டுள்ளதோடு, கோடிக்கணக்கான ரூபாய் இழப்பு ஏற்பட்டுள்ளது. இந்நோய் தாக்குதலிலிருந்து தேயிலை செடிகளை காப்பாற்ற "குபினால்பாஸ்' என்ற பூச்சிக்கொல்லி மருந்து அடிக்கப்படுகிறது என்றனர்.

**அலங்காரச் செடிகள் விவசாயிகளுக்கு வினியோகம்**

பதிவு செய்த நாள் : ஜனவரி 03,2011,21:02 IST

பெ.நா.பாளையம் : "ஆனைகட்டியில் பழச்செடிகள் மற்றும் அலங்கார செடிகள் உற்பத்தி செய்யப்பட்டு, விவசாயிகளுக்கு வினியோகம் செய்ய தயாராக உள்ளது' என, பெரியநாயக்கன்பாளையம் தோட்டக் கலை துறையினர் தெரிவித்தனர்.
ஆனைகட்டியில் உள்ள தோட்டக் கலைத்துறைக்கு சொந்தமான அரசு தோட்டக்கலைப் பண்ணையில் நெல்லி ஒட்டுச் செடிகள், சப்போட்டா, புளி, அலங்காரச் செடிகள், கொய்யா பதியன், எலுமிச்சை பதியன், சவுக்கு, தேக்கு, சில்வர் ஓக் மரக்கன்றுகள் வளர்க்கப்பட்டு விவசாயிகளுக்கு வினியோகம் செய்ய தயாராக உள்ளது. விருப்பம் உள்ள விவசாயிகள், பெரியநாயக்கன்பாளையம் தோட்டக்கலை உதவி இயக்குனர் அலுவலகம் மற்றும் மாவட்டத்திலுள்ள தோட்டக்கலை உதவி இயக்குனர் அலுவலகம், ஆனைகட்டி தோட்டக்கலை பண்ணை அலுவலர்களையும் தொடர்பு கொள்ளலாம். இத்தகவலை, பெரியநாயக்கன்பாளையம் தோட் டக்கலை உதவி இயக்குனர் ராஜஸ்ரீ தெரிவித்தார்.

**காய்கறி விலை மீண்டும் விர்ர்...**

பதிவு செய்த நாள் : ஜனவரி 03,2011,20:55 IST

கோவை : மழையை தொடர்ந்து உயர்ந்த காய்கறி விலை, குறைந்து மீண்டும் உயர்ந்தது. வடகிழக்கு பருவமழை நீடித்ததால் விவசாய விளை நிலங்களில் காய்கறி பயிராகும் பரப்பு குறைந்ததோடு, எதிர்பார்த்த அள விற்கு இல்லை. கோவைக்கு, மஹாராஷ்டிரா, புனே, ஆந்திர மாநிலத்தின் பெல்லாரியிலிருந்து வரும் பெரியவெங்காய வரத்து குறைந்தது. எனவே, கோவையில் அதிக பட்சமாக பெரியவெங்காயம் சில்லரை விற்பனை கிலோ ஒன்றுக்கு ரூ. 65 வரை விற்றது.

ஒரு வாரம் உயர்ந்திருந்த பெரிய வெங்காயத்தின் விலை, படிப்படியாக குறைந்தது. ஆனால், கிலோ ஒன்றுக்கு ரூ. 5, 10 என்று குறைந்து, ஒரு கிலோ விலை ரூ. 45 க்கு விற்றது. இந்நிலையில் கோவைக்கு பெல்லாரி, மற்றும் நாசிக், புனே ஆகிய பகுதிகளிலிருந்து எதிர்பார்த்த அளவு பெரிய வெங்காயத்தின் வரத்து கிடையாது. கோவையில் பெரிய வெங்காயத்தின் விலை உயர்ந்தது. தரமான பெரிய வெங்காயம், கிலோ ரூ.65க்கு விற்றது. பெரிய வெங்காயத்தின் விலை உயர்ந்ததால், சிறிய வெங்காயத்தின் விலையும் உயர்ந்துள்ளது. கோவை மார்க்கெட்டில் கிலோ ரூ. 40 முதல் 65 வரை சிறிய வெங்காயம் விற்றது. வெங்காய ரகங்களுக்கு கோவை டி.கே.மார்க்கெட்டில் தட்டுப்பாடு ஏற்படவில்லை.

நேற்று விற்பனை செய்யப்பட அனைத்து காய்கறிகளின் விலையும் வழக்கத்தை காட்டிலும் சற்று உயர்ந்திருந்தது.இதுகுறித்து காய்கறி வியாபாரி மணி கூறியதாவது:உள்ளூரில் இருப்பு வைக்கப்பட்டிருந்த சிறிய வெங்காயம் மார்க்கெட்டுக்கு விற்பனைக்கு வந்தது. இருப்பிலிருந்த வெங்காயம் விற்று தீர்ந்தது. கர்நாடக மாநிலத்தின் சில பகுதிகளிலிருந்து சிறிய வெங்காயம் விற்பனைக்கு வருகிறது. எனவே, கிலோ ரூ. 45 முதல் ரூ.65 வரை விற்பனையாகிறது. தவிர மற்ற காய்கறிகளின் விலை உயர்ந்தே உள்ளது. பொங்கல் பண்டிகைக்கு பின் காய்கறிகளின் விலை குறைவதற்கு வாய்ப்பு உள்ளது. இவ்வாறு, மணி கூறினார்.

தினத் தந்தி
DAILY THANTHI
வெல்க தமிழ்

## நடப்பு 2010–11 வேளாண் பருவத்தில் வெங்காயம் உற்பத்தி 12 சதவீதம் குறையும்



இக்கனாமிக் டைம்ஸ் செய்தி பிரிவு

புதுடெல்லி

இந்தியாவில், நடப்பு 2010–11 வேளாண் பருவத்தில் (ஜூலை–ஜூன்), வெங்காயம் உற்பத்தி 12 சதவீதம் குறையும் என மதிப்பிடப்பட்டுள்ளது. கடந்த 2009–10 பருவத்தில் நாட்டின் வெங்காயம் உற்பத்தி 1.20 கோடி டன்னாக இருந்தது. இது, நடப்பு பருவத்தில் 1.05 கோடி டன்னாக சரிவடையும் என எதிர்பார்க்கப்படுகிறது. நம் நாட்டில் கரீஃப் பருவத்தில் இரண்டு கட்டங்களிலும், ரபி பருவத்திலும் வெங்காயம் சாகுபடி செய்யப்படுகிறது.

பாதிப்பு

வெங்காயம் உற்பத்தி குறித்து நாசிக்கை சேர்ந்த தேசிய தோட்டக்கலை ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு அறக்கட்டளையின் கூடுதல் இயக்குனர் சதீஷ் பாண்டே கூறும்போது, “பருவம் தவறி பெய்த மழையால் கரீஃப் பருவத்தில் 35 சதவீத அளவிற்கு வெங்காய பயிர் பாதிக்கப்பட்டது. இதனால் நடப்பு பருவத்தில் ஒட்டுமொத்த அளவில் வெங்காயம் மகசூல் 15 லட்சம் டன் குறைய வாய்ப்புள்ளது” என்று தெரிவித்தார். இந்தியாவில் மகாராஷ்டிரா மற்றும் கர்நாடகா ஆகிய மாநிலங்கள் வெங்காயம்

உற்பத்தியில் முன்னிலையில் உள்ளன. நாட்டின் மொத்த வெங்காயம் உற்பத்தியில் இந்த இரண்டு மாநிலங்களின் பங்களிப்பு 50 சதவீதம் என்பது குறிப்பிடத்தக்கது.

ரபி பருவம்

அண்மையில் வெங்காயம் விலை வரலாறு காணாத அளவிற்கு உயர்ந்தது. ஒரு கிலோ வெங்காயம் விலை ரூ.100 வரை அதிகரித்தது. இதனால் பல விவசாயிகள், அதிக லாபம் ஈட்டும் நோக்கத்துடன், வெங்காய பயிர் முதிர்வதற்கு முன் அறுவடை செய்யும் நடவடிக்கைகளில் இறங்கினர். இதனாலும் மகசூல் குறைந்துள்ளது. தற்போது விலை பெரிதும் குறைந்துள்ளது என்றாலும் ஒரு கிலோ வெங்காயம் விலை ரூ.40–60 என்ற அளவில் அதிகமாகவே உள்ளது.

வெங்காயம் உற்பத்தியில் ரபி பருவத்தின் பங்களிப்பு 60 சதவீதமாக உள்ளது. எனினும் கரீஃப் பருவத்தில் ஏற்பட்ட இழப்பு ரபி பருவத்தில் ஈடு செய்யப்படுமா என்பது கேள்விக்குறியாகவே உள்ளது. காரணம் அண்மையில் பெய்த அடைமழையால் வெங்காய தோட்டங்கள் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளன. உற்பத்தி அதிகரிப்பது வெங்காயத் தோட்டங்களை திறம்பட நிர்வகிப்பதில்தான் உள்ளது.